இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 08-07-2023

# இதைவிட வேறென்ன வேலை?

அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்படும் கோப்புகளுக்கு கையெழுத்துப் போடுவது மட்டும்தான் ஆளுநரின் வேலை ஆகும். அதைக் கூட ஒழுங்காகச் செய்யாமல் வேறென்ன வேலை அவருக்கு இருக்கிறது? சனாதன பஜனை பாடுவதை விட்டுவிட்டு தனது வேலையை மட்டும் ஒழுங்காக அவர் பார்க்க வேண்டும்.

**திராவிடம் - திருக்குறள் - வள்ளலார் ஆகிய கருத்துருக்களுக்கு எல்லாம் தவறான பொருள் சொல்லிக் கொண்டு இருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி இப்போது, கூசாமல் பொய் சொல்லிக் கொண்டு இருக்கிறார். ஆரியத்தின் குணமே அதுதானே!**

**அ.தி.மு.க. ஊழல்வாதிகளைக் காப்பாற்ற அவர் நடத்திய சதிச்செயல்கள் பொதுவெளியில் அம்பலம் ஆனதும் பொய் சொல்லத் தொடங்கிவிட்டார் ஆர்.என்.ரவி. இந்தப் பொய்களுக்கு ஆளுநர் மாளிகையைப் பயன்படுத்துவது அரசியல் சட்டத்தையே அவமதிப்பது ஆகும்.**

இரண்டு நாட்களுக்கு முன்னால் தமிழ்நாடு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி வெளியிட்ட அறிக்கையானது, ஆளுநர் ஆர்.என். ரவியின் முகத்திரையைக் கிழித்தது.

ஊழல் வழக்குகளில் நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கிட இசைவு ஆணைக்காக அனுப்பப்பட்ட கோப்புகள் நீண்ட காலமாக நிலுவையில் இருப்பதையும், ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்கள் நிலுவையில் உள்ளதையும் குறிப்பிட்டு, “அதற்கு உரிய அனுமதியைத் தாருங்கள்!” என்று ஆளுநரைக் கேட்டிருந்தார் சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி.

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களான சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா ஆகியோர் குட்கா, மாவா விநியோகிப்பாளர்களிடமிருந்து சட்ட விரோதமாகப் பணம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பாக உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்து விசாரித்து, இவர்கள் மீது நீதிமன்ற விசாரணை தொடங்குவதற்கு இசைவு ஆணையை சி.பி.ஐ. கோரியது. தமிழ்நாடு அமைச்சரவை இதற்கான ஒப்புதலை வழங்கி விட்டது. அதற்கு இசைவு ஆணை கோரும் சி.பி.ஐ.யின் கோரிக்கையை ஆளுநர் அலுவலகத்துக்கு 12.9.2022 ஆம் நாள் தமிழ்நாடு அரசு அனுப்பிவைத்துள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்துக்கு இந்த ஆண்டு ஜூலை வரைக்கும் பதில் இல்லை. 10 மாதங்கள் ஆகிவிட்டன.

**பொதுவெளியில் இதனைச் சொன்னதும், என்ன சொல்கிறார் ஆளுநர்? அவரது விசாரணையில் இருக்கிறதாம். இன்னும் எத்தனை மாதங்கள் இவர் சட்ட வல்லுநர்களுடன் விசாரிப்பார்? இந்த சனாதன மேதை, சட்ட மேதைகளுடன் இன்னும் எத்தனை மாதங்கள் ஆலோசனை நடத்துவாரோ தெரியவில்லை?**

**கோவை கார் சிலிண்டர் வெடிப்பில் மூன்று நாட்கள் கழித்து மத்திய முகமைக்கு வழக்கு மாற்றிவிட்டார்கள் என்று கொதித்துப் போனவர்தான், இந்த 10 மாதமாக ஆலோசித்துக் கொண்டே இருக்கும் ஆளுநர்.**

இன்னொரு தகவலையும் சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி வெளிப்படுத்தி இருந்தார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், முன்னாள் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சராக இருந்த கே.சி.வீரமணி மற்றும் முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் மீது நீதிமன்ற விசாரணையைத் தொடங்கிட இசைவு ஆணை கோரியது. இந்தக் கோரிக்கைகளுக்கு மாநில அமைச்சரவை அனுமதி அளித்து அதற்கான கடிதங்கள், 12.09.2022 மற்றும் 15.05.2023 ஆகிய தேதிகளில் ஆளுநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. இந்த கோரிக்கைக் கடிதங்களும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன. முந்தைய அ.தி.மு.க. அமைச்சர்கள் மீதான எந்த ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளிலும் நீதிமன்ற விசாரணையைத் தொடங்கிடத் தேவையான இசைவு ஆணையை இதுவரை ஆளுநர் வழங்கவில்லை - என்பது குற்றச்சாட்டு.

**கே.சி.வீரமணி மீதான வழக்கின் புலனாய்வு அறிக்கை வர வேண்டுமாம். அதனால் கையெழுத்துப் போடவில்லையாம். ‘புலனாய்வு அறிக்கையை அனுப்பி வையுங்கள்’ என்று இவர் வாயைத் திறந்து அரசிடம் கேட்க வேண்டியதுதானே? சனாதனத்தை ஆதரித்து நித்தமும் உளறிக் கொண்டு இருப்பவருக்கு இதைக் கேட்க என்ன தயக்கம் இருக்கிறது? “இப்படி ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறோம், ஏன் அனுமதி தரவில்லை?” என்று சொன்ன பிறகுதானே இது வெளியில் தெரிகிறது.**

★ கே.சி. வீரமணி மீதான ஊழல் வழக்கு கோப்புகள் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் தேதி அன்றே ஆளுநர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் லஞ்ச ஒழிப்புத் துறையின் இறுதி விசாரணை அறிக்கை முழுமையாக இருக்கிறது.

★ எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீதான ஊழல் வழக்கு தொடர்பான கோப்புகள் கடந்த மே 15ஆம் தேதி அன்றே ஆளுநர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதிலும் லஞ்ச ஒழிப்புத் துறையின் இறுதி விசாரணை அறிக்கை முழுமையாக இருக்கிறது. இந்தக் கோப்பைப் பெற்றுக் கொண்டதாக ஆளுநர் மாளிகை ஒப்புதல் கடிதம் கொடுத்திருப்பதாக சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி சொல்லி இருக்கிறார்.

ஆனால் எந்தக் கடிதமும் வரவில்லை என்கிறார் ஆளுநர். அப்படியானால் இவருக்கு ஆளுநர் மாளிகையில் என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை. அங்கு வரும் கடிதங்கள் இவருக்கே மறைக்கப்படுகிறதா? அல்லது இவரே மறந்து போய்விடுகிறாரா? அல்லது அனைத்தையும் மறைக்கிறாரா? இவரது நோக்கமும் - சொல்லும் - செயலும் சந்தேகத்துக் குரியதாகவே இருக்கிறது.

**தெரியாத விஷயங்களை விபரம் இல்லாமல் பேசுகிறார் என்று முன்பு பலரும் விமர்சித்தார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. அவர் தெரிந்தேதான் பேசுகிறார். பல்கலைக் கழகங்களுக்கு வேந்தர் அதிகாரம் என்பது ஆளுநரிடம் இருந்து பறித்து, முதலமைச்சருக்கு வழங்கும் கோப்புகளை மட்டும் நிறுத்தினால், ‘தனது அதிகாரம் பறி போகாமல் இருக்க’ கையெழுத்துப் போட மறுக்கிறார் என நினைக்கலாம்.**

**ஆன்லைன் சூதாட்டத்தில் அவர் ஆடிய அரசியல் சூதாட்டம்தான் ‘மிகமிக விவரமானவர்’ ஆளுநர் என்பதை அம்பலப்படுத்தியது. இப்போது ஊழல்வாதிகளைக் காப்பாற்றவும் செய்கிறார்ள ஆளுநர். இது அவரை முழுமையாக அடையாளப்படுத்தி - அவரது முகத்திரையைக் கிழிப்பதாக அமைந்திருக்கிறது.**

இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள், என்ன சொன்னாலும் திருந்த மாட்டார்கள்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.7.2023) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் திருக்கோயில்கள் சார்பில் 34 இணைகளுக்கான திருமணங்களை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இத்திருமண விழாவில், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்துசமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், இந்து சமய அறநிலைத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உயிரியல் பூங்கா மேம்பாட்டுக்கு - சன் டி.வி. ரூ.5 கோடி நிதியுதவி!

சென்னை, ஜூலை 8-

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா மற்றும் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலய மேம்பாட்டுக்காக சன் டி.வி. ரூ.5 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவ சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத்திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா மற்றும் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தவும் சன் டி.வி. 5 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது.

இதற்கான காசோலையை, தமிழ்நாடு முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குநர் சீனிவாச ரெட்டி மற்றும் துணை இயக்குநர் காஞ்சனா, உதவி இயக்குநர் மணிகண்ட பிரபு ஆகியோரிடம் சன் டி.வி சார்பில் காவேரி கலாநிதி மாறன் வழங்கினார்.

இந்த நிதியைப் பயன்படுத்தி, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பேட்டரி மூலம் இயங்கும் 10 வாகனங்கள், சிங்க உலா வாகனங்கள் வாங்கப்படும். அத்துடன், விலங்குகள் மற்றும் பறவைகள் இருப்பிடங்களைப் புதுப்பிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏழை எளியோருக்குக் கல்வி, அடிப்படைக் கட்டமைப்புகள் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல், தரமான இலவச சிகிச்சை, மகளிர் மற்றும் இளைஞர் நலன், கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்து வதற்காக சன் டிவியும் சன் பவுண்டேஷனும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகின்றன.

இத்திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. இணைந்து இதுவரை 185 கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி உதவி அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.


### அமைச்சர் துரைமுருகன் - டி.ஆர்.பாலு எம்.பி. முன்னிலை! திராவிட இயக்க எழுத்தாளர்

## க.திருநாவுக்கரசு புதல்வர் தி.சிற்றரசு - த.எழிலரசி மணவிழா!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 8-

திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு - தி.கோடீசுவரி ஆகியோரின் புதல்வர் தி.சிற்றரசுக்கும் - நினைவில் வாழும் தொழிற் சங்கத் தலைவர் வி.எம்.ஆர். சபாபதி - சாவித்திரி அம்மாள் ஆகியோரின் பெயர்த்தியும், நினைவில் வாழும் சி.தயாமூர்த்தி - இராணி ஆகியோரின் புதல்வியுமான



த.எழிலரசிக்கும் மணவிழா 9.7.2023 - ஞாயிறு காலை 9.30 மணியளவில் சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

மணவிழாவில் மு.சண்முகம் எம்.பி. வரவேற்புரையாற்றுகிறார். டி.கே.எஸ். இளங்கோவன் தொகுப்புரை வழங்குகிறார்.

இம்மணவிழாவை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, வைகோ எம்.பி., ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சுப. வீரபாண்டியன், நக்கீரன் கோபால், விஜயா தாயன்பன், கி.நடராசன், நே.சிற்றரசு உள்ளிட்ட கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழத்துகின்றனர்.

திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு நன்றி கூறுகிறார்.

இம்மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 9.7.2023 - ஞாயிறு மாலை 6.30 மணியளவில் திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி தாயன்பன் வழங்கும் பல்லவி குழுவினரின் மெல்லிசையுடன் நடைபெறுகிறது.

### முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரியும்

## டி.தீபக் - பி.ராஜபிரியா திருமண வரவேற்பு விழா!

### கழகத்தினர் - குடும்பத்தினர் வாழ்த்துகின்றனர்!

திருவள்ளூர், ஜூலை 8-

முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரியும் டி.தீபக் - பி.ராஜபிரியா ஆகியோரின் திருமணம் மற்றும் திருமண வரவேற்பு விழா, நாளைய தினம் திருவள்ளூரில் நடைபெறுகிறது.

இம்மண விழா பற்றிய விவரம் வருமாறு:

திருவள்ளூர் மாவட்டம், பூங்கந்தூர் கிராமம், (நினைவில் வாழும்) ஜி.பாபு முதலியார் - பி.சரோஜா அம்மாள் ஆகியோரின் பேரனும், பி.தேவராஜ் முதலியார் - டி.ராதா ஆகியோரின் புதல்வரும், முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரிபவருமான டி.தீபக்கிற்கும் - திருவள்ளூர் மாவட்டம் - திருத்தணி வட்டம் - முத்துக்கொண்டாபுரம் கிராமம் (நினைவில் வாழும்) ஆர்.விஸ்வநாதன் முதலியார் - வி.முருகம்மாள் ஆகியோரின் பேத்தியும், வி.பழநி - பி.நைனியம்மாள் ஆகியோரின் புதல்வியுமான பி.ராஜபிரியாவிற்கும் திருமணம் நாளைய தினம் (9.7.2023 - ஞாயிற்றுக் கிழமை) காலை 6 மணி அளவில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெறுகிறது.



அதனைத் தொடர்ந்து, திருமண வரவேற்பு விழா, அன்று மாலை 6 மணி அளவில் திருவள்ளூர், காக்களூர் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள தனமணிராஜ் மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவிலும் - மணவிழா வரவேற்பிலும் கழக நிர்வாகிகள், குடும்பத்தினர், நண்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பி.பூபதி - பி.சங்கரி, பி.சரவணன் - எஸ்.லட்சுமி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

### ‘தளபதி மு.க.ஸ்டாலினின்

## சின்ன சின்ன முத்துக்கள்’!

### சுரேஷ் தேவராஜன் தொகுப்பு நூல் வெளியீடு

சென்னை, ஜூன், 8–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளிலும், பொதுக் கூட்டங்களிலும் தெரிவித்த கருத்துகள், பொன் மொழிகளாக ‘சின்ன சின்ன முத்துக்கள் பொன் மொழிகள் தளபதி மு.க. ஸ்டாலின்’ என்ற பெயரில் சுரேஷ் தேவராஜனால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தொகுப்பு நூலில் கட்சியினருக்குத் தெரிவிக்கும் செய்திகள் என்பதையும் தாண்டி, பொதுவாழ்வுக்குப் பயன்படும் கருத்துகளும் இதில் மிளிர்வதைக் காணலாம்.

‘வியூகமும் கடுமையான உழைப்புமே அரசியலில் முடிவுகளைத் தீர்மா னிக்கும்’, ‘என்னதான் பறவைகள் உயர, உயரப் பறந்து கொண்டு இருந்தாலும் இரை தேடி கீழே வந்துதான் தீரவேண்டும்’, ‘பாதை பண்படுத்தப்பட்டதாக இருக்கும்போதுதான் பயணத்தின் இலக்கினை விரைந்து எட்ட முடியும்’ என்பது போன்றவை சிந்தனைக்கு விருந்தாக்கும் வகையில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் கருத்துகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை – தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (06.07.2023) சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் வருகிற ஆகஸ்ட் 03 முதல் ஆகஸ்ட் 13 வரை ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் – 2023 போட்டியினை சிறப்பாக நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் பங்களிப்பாக ரூபாய் 12 கோடிக்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஹாக்கி இந்தியா நிர்வாகிகளிடம் வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா பொது செயலாளர் போலாநாத் சிங், தலைமை நிர்வாக அலுவலர் திருமதி எலினா நார்மன், நிர்வாக இயக்குநர் ஸ்ரீவஸ்தவா, பொருளாளர் சேகர் மனோகரன் ஆகியோர் உள்ளனர்.